* கு.கா.வி. எண். 45—திரு. எம். எஸ்; மாணிக்கம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் ஒன்றியம் 1980-81-ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழுப்புவதற்கு இடமில்லை.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இந்தத் தன்னிறைவுத் திட்டம் நான்காண்டு காலத்தில் முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மொத்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவு? அவை எந்தெந்த வகையில் அந்த ஒன்றியங்களுக்குப் பயன்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வருகிற நான்காண்டுகளுக்குள்ளாக 374 ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்தி அதன்மூலம் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெரு மின் விளக்கு வசதி, சுகாதாரம், கல்வி, சாலை வசதி இவைகளையெல்லாம் சீர் செய்து செம்மைப்படுத்தி ஒவ்வொரு ஒன்றியங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த தன்னிறைவுத் திட்டம் செயல்படும். இதற்கு செலவிடக்கூடிய தொகை ரூபாய் 151 கோடி 10 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10.10)

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்திலே பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஒன்றியங்களை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதிலே வளர்ச்சித் திட்டங்களே வராத, பின்தங்கி இருக்கின்ற ஒன்றியங்களும் எடுத்துக் கொள்ளப்படுமா ? அதிலே வேதாரண்யம் ஒன்றியத்தை எடுத்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஐ.ஆர்.டி.பி. அதாவது ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டம் செயல்படுகின்ற ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் எந்தெந்தப் பகுதிகளிலே அதிகமாக செயல்படுத்தப்படு

1980 ஜூலை 26] [திரு. ப. குழந்தைவேலு]

இன்றதோ, அந்த ஒன்றியங்களை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒன்றியங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் செலவு செய்யும் தொகை குறையும். அந்த அடிப்படையிலே முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எடுக்கப்பட இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டங்கள் இல்லாத ஒன்றியங்களை இப்போது எடுக்கவில்லை. அடுத்த ஆண்டு இன்னும் அதிகமான ஒன்றியங்கள் எடுக்கப்படும். ஆகவே, 374 ஒன்றியங்களும் இந்த அடிப்படையிலே வசதி செய்து கொடுக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தன்னிறைவுத் திட்டம் துவக்கப்பட்டு, எத்தனை ஆண்டுகளுக்குள், திட்டம் முடிக்கப்பட வேண்டும். ஆண்டுக்கு எத்தனை ஒன்றியங்கள் வீதம் நிறை வேற்றப்பட உள்ளது? அப்படி நிறைவேற்றுகின்றபோது, ஒவ்வொரு ஆண்டுக்கும் இந்த ஒன்றியங்களுக்கு செலவழிக்கக்கூடிய தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே 4 ஆண்டுகளுக்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னேன். அதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்தை படிப்படியாக, உடனே 69 ஒன்றியங்கள், இந்த ஆண்டு 100, அடுத்த ஆண்டு 100, அதற்கு அடுத்த ஆண்டு 105 என்று இப்படி 374 ஒன்றியங்களையும் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருக்கிறது? என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 7 அல்லது 8 ஒன்றியங்கள் எடுக்கப்பட இருக்கிறது. இதற்கு நான் பதில் சொன்னால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுமென்றால், 169 ஒன்றியங்களின் பெயர்களைச் சொல்லவேண்டிய நிலை ஏற்படும். அவைத் தலைவர் அவர்கள் எனக்கு அனுமதி கொடுத்தால், சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நேரம் கிடையாது. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]